செ.வெ.எண்.33 நாள்:15.05.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்.இ.ஆப., அவர்கள் வழங்கினார்கள்.**

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.05.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட சமூகநலத்துறை மூலம் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு திட்டத்தின்கீழ் தையல் இயந்திரம் 45 பயனாளிகளுக்கும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறையின் மூலம் தையல் இயந்திரம் 5 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்பு திட்டம் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் திருமணம், இயற்கை மரணம் உதவித்தொகை 6 பயனாளிகளுக்கு ரூ.54,500 க்கான காசோலைகளையும் வழங்கினார், மீன்வளத்துறையின் மூலம் 2015 —— 16 ம் கல்வியாண்டில் நடைபெற்ற் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடம் பிடித்த மாணவிக்கு ஊக்க பரிசு தொகை ரூ.20,000 க்கான காசோலையினையும், மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பில் முதலிடம் பிடித்த மாணவிக்கு ரூ.6,000, இரண்டாம் இடம் படித்த மாணவிக்கு ரூ.4,000, மூன்றாம் இடம் பிடித்த மாணவிக்கு ரூ.2,000, மாவட்ட அளவில் பத்தாம் வகுப்ப பொதுத்தேர்வில் முதலிடம் பிடித்த மாணவர்க்கு ரூ.3,000, மற்றும் இரண்டாம் இடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.2,000, மூன்றாம் இடம் பிடித்த மாணவர்க்கு ரூ.1,000, மொத்தம் ரூ 40,000 க்கான கசோலையினையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் கருணை அடிப்படையிலான இரண்டு நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும், செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் ஒரு மாற்றுத்திறனாளிக்கு மாற்றுத்திறனாளி உபகரணங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.ஆர்.விஜயலெட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்தியநாராயணன், மாவட்ட சமூக பாதுகாப்பு அலுவலர் திருமதி.முத்துலெட்சுமி உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.